இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 23-11-2024

# விவசாயிகளைப் பற்றி பழனிசாமி பேசலாமா?

எடப்பாடி பழனிசாமி, விவசாயிகளை வைத்து தனக்குப் பாராட்டு விழா நடத்தி இருக்கிறார். அதில் நானும் ஒரு விவசாயி என்றும், விவசாயிகளை தனது ஆட்சிக் காலத்தில் பாதுகாத்தேன் என்றும் சொல்லி இருக்கிறார். பச்சைத் துண்டு போட்டுக் கொண்டு 'பச்சைப் பொய்'களை அவிழ்த்து விட்டு இருக்கிறார் பழனிசாமி. இவரது ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் வேதனையும் வெம்பலும்தான் பட்டார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். இதனை எல்லாம் விவசாயிகள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டு வருகிறார் பழனிசாமி.

**விவசாயிகளை நிலத்தில் இருந்து விரட்டுவதற்காக மோடி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்ததைவிட பழனிசாமியின் துரோகத்துக்கு எடுத்துக்காட்டு வேண்டுமா?**

**தனியார் மண்டிகளிடம் விளைபொருட்களை தேக்கி வைக்கும் தந்திரம் இந்தச் சட்டத்துக்குள் இருப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டினார்கள். வேளாண் உற்பத்திப் பொருள்களை, குறிப்பாக கோதுமை மற்றும் நெல் கொள்முதலை அரசு படிப்படியாகக் குறைத்து, கடைசியில் கொள்முதல் செய்வதையே நிறுத்திவிடும் என்றும், அதனால் மார்க்கெட்டை இயக்கும் சக்தியாக இருக்கப் போகும் தனியாரைச் சார்ந்தே தாங்கள் இருக்க வேண்டியிருக்கும் என்றும் விவசாயிகள் குற்றம்சாட்டினார்கள்.**

**குறைந்தபட்ச ஆதார விலை (எம்.எஸ்.பி.) நடைமுறை கைவிடப்படுவதால் விவசாயிகள் தான் சிரமத்துக்கு ஆளாவார்கள் என்றும் விவசாயிகள் அஞ்சினார்கள். ஆனால் இந்தப் போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்தான் பழனிசாமி. இந்தச் சட்டத்தை ஆதரித்து பொது வெளியில் பேசிய ஒரே முதலமைச்சர் பழனிசாமிதான்.**

போராடும் விவசாயிகளை 'புரோக்கர்கள்' என்றார். "மூன்று வேளாண் சட்டங்களால் என்ன தீமை?" என்று கேட்டார். "மூன்று சட்டங்களுக்கு ஆதரவாக யாருடனும் நான் விவாதிக்கத் தயார்" என்றார். விவசாயிகளின் எதிர்ப்பை தாங்க முடியாத பா.ஜ.க. அரசு பணிந்தது. சட்டங்களை திரும்பப் பெற்றது.

தி.மு.க. ஆட்சி மலர்ந்ததும், "மூன்று சட்டங்களும் நமது நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் நலனுக்கும் உகந்ததாக இல்லை என்பதால், அவை ஒன்றிய அரசினால் ரத்து செய்யப்படவேண்டும் என இந்தச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது" என்று தீர்மானம் கொண்டு வந்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பா.ஜ.க. இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வெளிநடப்பு செய்ததைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால், இந்த மூன்று சட்டங்களையும் ரத்து செய்யும் தீர்மானத்தை அவர்களால் ஆதரிக்க முடியாது. ஆனால் விவசாயி வேடம் போட்டு வந்த அ.தி.மு.க. எதற்காக வெளிநடப்பு செய்ய வேண்டும்? ஆட்சியில் இருக்கும் போது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க.வுக்கு பயந்தார்கள். இப்போதும் பயந்து நடுங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதே போன்ற துரோகத்தைத்தான் காவிரிப் பிரச்சினையிலும் பழனிசாமி செய்தார். காவிரி இறுதித் தீர்ப்பு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் - 2007 ஆம் ஆண்டு வந்தது. 192 டி.எம்.சி.தான் என்று தீர்ப்பு வந்தது. அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்டு அனைவர் முடிவின் படி நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார் முதல்வர் கலைஞர். காவிரி மன்றத்தையும் நாடினார். காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னார். 2017ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் இறுதி விவாதம் வந்தபோது அ.தி.மு.க. அரசு சரியாக வாதிடவில்லை. அழுத்தமான வாதங்களை வைக்கவில்லை. நமது மாநிலத்தின் ஜீவாதாரப் பிரச்சினை இது என்பதைச் சொல்லவில்லை. இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு 2018 ஆம் ஆண்டு வந்தது. அதன்படி காவிரி ஆணையம் அமைக்கப்பட்டு உடனடியாக நீர் தாவா முறைப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

கர்நாடக மாநிலத்தின் தேர்தலை மனதில் வைத்து மத்திய பா.ஜ.க. அரசு இதனைச் செயல்படுத்தவில்லை. அப்போது முதலமைச்சராக இருந்த பழனிசாமியும் ஒன்றிய அரசைக் கேட்கவில்லை.

**காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்று போராடியதும் தி.மு.க.தான். தமிழகம் வந்த பிரதமருக்கு தி.மு.க. கருப்புக் கொடி காட்டியது. காவிரி உரிமை மீட்புப் பயணத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டார்கள். 'காவிரி மேலாண்மை வாரியம்' என்ற பெயரால் டெல்லியில்தான் அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் சொன்னது தி.மு.க. பா.ஜ.க. அரசு அதிகாரமற்ற ஒரு அமைப்பைத் தொடங்கி, அதனை ஒன்றிய அரசின் ஜல்சக்தி துறையோடு சேர்த்துவிட்டார்கள். அதையும் எடப்பாடி அரசு தட்டிக் கேட்கவில்லை. இவர்தான் இன்று விவசாயி வேடமிடுகிறார்.**

**"விவசாயிகள் கடனை ரத்து செய்ய மாட்டேன்" என்று சொல்லி உச்சநீதிமன்றம் வரை போனவர்தான் பழனிசாமி. காவிரியில் உரிமையை நிலைநாட்டாதவர்தான் பழனிசாமி. டெல்டா மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு எதிராகப் போராடிய விவசாயிகளை ஒடுக்கியவர்தான் இந்த பழனிசாமி. வேளாண் மண்டலம் என்பதை போலியாக அறிவித்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் செயல்படும் என்ற சதி செய்தவர்தான் இந்த பழனிசாமி. 'கிசான்' திட்டத்தில் போலி நபர்களைச் சேர்த்து முறைகேட்டுக்கு உதவிய ஆட்சிதான் பழனிசாமி ஆட்சி. குடிமராமத்துப் பணிகளில் ஊழல் செய்த ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி. நீர் வள உரிமையைப் பறிக்கும் ஜல்சக்தி திட்டத்தை ஆதரித்தவர்தான் பழனிசாமி. அணை பாதுகாப்பு உரிமையை விட்டுத் தந்தவர்தான் பழனிசாமி. இவர் விவசாயிகளைப் பற்றிப் பேசலாமா?**

**பழனிசாமி விவசாயி அல்ல; கபட வேடதாரி என்பது விவசாயிகளுக்கே தெரியும். பயிருக்கும் களைக்கும் வித்தியாசம் தெரிந்தவர்கள்தான் விவசாயிகள்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (21.11.2024) சென்னை, திருவான்மியூரில் நடைபெற்ற மு.க.முத்து – திருமதி சிவகாமசுந்தரி தம்பதியரின் மகள்வழிப் பேத்தியும், சி.கே.ரங்கநாதன் – திருமதி தேன்மொழி ரங்கநாதன் தம்பதியரின் மகளுமான தரணீஸ்வரி – ஆகாஷ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். திருமதி. சாந்தா ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தயாநிதி மாறன் எம்.பி., பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நடிகர்கள் விக்ரம், சிவகார்த்திகேயன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# திருச்சியில் ரூ.46.25 கோடி மதிப்பில் 1,576 பேருக்கு நலஉதவிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

*திருச்சி, நவ. 23-*

தேர்தல் நேரத்தில் சொல்லப்படாத பல பணிகளையும் நம்முடைய முதலமைச்சர் செய்து வருகிறார் என்று திருச்சி அரசு விழாவில் அமைச்சர் நேரு பேசினார்.

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள கலையரங்கம் திருமண மண்டபத்தில் ரூபாய் 18. 44 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி ரூபாய் 46.25 கோடி மதிப்பீட்டில் 1576 பயனாளர்களுக்கு அரசின் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே என் நேரு கலந்து கொண்டு முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் 1576 பயனாளிகளுக்கு அரசின் நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன், ஸ்டாலின் குமார், காடுவெட்டி தியாகராஜன், பழனியாண்டி, மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்ட வருவாய் ஆய்வாளர் ராஜலட்சுமி உட்பட அரசு அதிகாரிகள் திரளாக கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றினார்.

நம்முடைய மாவட்ட ஆட்சியர் மக்களுக்கு இலவச பட்டா வழங்குவது மட்டுமல்ல வாரந்தோறும் அரசு சார்பாக அனைத்து பேருக்குமே என்னென்ன உதவிகள் தேவையோ அதை முறைப்படி சரியாக செய்து கொண்டிருக்கின்றார். அவருடைய வற்புறுத்தலிலே தான் இந்த கூட்டம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முடிவற்ற பணிகளை திறந்து வைத்து, புதிதாக புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதோடு, மற்ற நகரங்கள் காட்டிலும் திருச்சி சட்டமன்ற தொகுதிகள் அனைத்திலும் வெற்றி பெற்றதால் திருச்சி மாவட்டம் அதிகமாக பயன்பெற வேண்டும் என்று சொல்லி தான் கிட்டத்தட்ட 4000 கோடி ரூபாய்க்கு உள்ள திட்டங்களை திருச்சிக்கு மட்டும் முதலமைச்சர் தந்து இருக்கிறார்கள். ஏற்கனவே முதலமைச்சர் தொகுதிக்கு தேவையான 10 பணிகளை எழுதி தாருங்கள் நான் செய்து தருகிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள்.

எனவே அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி தேவையான பத்து பணிகளை எழுதி மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கினால் அவர் அதை ஆவணம் செய்து முதலமைச்சருக்கு அனுப்பி வைப்பார். இந்த ஆட்சியில் 1.16 கோடி மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. இலவசமாக பேருந்தில் பயணம் செய்யும் திட்டத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். திருச்சி மாவட்டத்தில் 100 பெண்களின் 94 பெண்கள் உயர்கல்விக்குச் செல்கிறார்கள். அதற்கு காரணம் நம்முடைய முதலமைச்சர் படிக்கும் மாணவிகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருவது தான் காரணம்.

பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்காக கலைஞர் அவர்கள் திருமண உதவித் தொகையை அன்றைய காலகட்டத்தில் பத்தாவது படித்தால் திருமண உதவித்தொகை 12 வது படித்தால் திருமண உதவித் தொகை என்று வழங்கி கல்வியை பெண்களுக்கு ஊக்கப்படுத்தினார். இன்று அந்தத் திட்டத்தை நம்முடைய முதல்வர் விரிவாக்கி மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறார். சிறிய பிள்ளைகளுக்கு காலை உணவு திட்டத்தை வழங்கி வருகிறார். தேர்தல் நேரத்தில் சொல்லப்படாத பல பணிகளையும் நம்முடைய முதலமைச்சர் செய்து வருகிறார். பெரம்பலூரில், எறையூர் புதிய கம்பெனி மூலம் 2ஆயிரம் பெண்கள் வேலைக்கு போகிறார்கள்.

அரியலூரில் ஒரு வேலை வாய்ப்பை தொடங்கி 5000 பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருக்கிறார். மாவட்டத்தில் 25 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்குவது மற்றும் மணப்பாறை சிப்காட்டில் புதிய தொழிற்சாலையை ஒப்பந்தமாகி விட்டது விரைவில் அந்த தொழிற்சாலை வர இருக்கிறது திருவரம்பூர் பெல் நிறுவனத்தில் மட்டுமே வேலை வாய்ப்பு என்ற நிலையை மாற்றி மணப்பாறையிலும் வேலைவாய்ப்பு பெறுவதற்கான நிலையை முதலமைச்சர் உருவாக்கி இருக்கிறார். திருச்சி மாநகராட்சி மிகவும் பாதுகாப்பான மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது இந்த திருச்சி மாநகராட்சிக்கு மட்டும் ஒரே இடத்தில் 450 கோடியில் மேலும் புதிய பேருந்து நிலையம் லாரி நிறுத்துவதற்கு 130 கோடி, புதிய மார்க்கெட் 330 கோடி என தமிழ்நாடு அரசு சார்பிலும், மத்திய அரசின் வாயிலாக மேம்பாலம் மற்றும் பாலங்கள் கட்டுவதற்காக 900 கோடி பைபாஸ் கட்டுவதற்காக 3000 கோடி அரசின் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

குடமுருட்டி முதல் பஞ்சப்பூர் கோரையாறு கரை வரை 40 அடி அகலத்திற்கு பாதையை அகலப்படுத்தி சாலை அமைப்பதற்கான திட்டம் போடப்பட்டு அதற்காக நான் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அதில் 300 கோடி ரூபாய்க்கு இரண்டு திட்டங்கள் விரைவில் ஒப்பந்த புள்ளிகள் கூறப்பட உள்ளது இதைத் தாண்டி திருச்சி மாவட்டத்தில் 4800 குடும்பங்களுக்கு புதிய வீடு கட்டி கொடுக்கும் திட்டம், வீடுகளுடன் பட்டா தரும் திட்டம் இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும் என்றார்.

## குமரியில் திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை

# கண்ணாடி இழை தரைத்தள பாலம் அமைக்கும் பணிகள்!

## டிசம்பருக்குள் முடிவடையும்! ஆய்வு செய்த அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

*கன்னியாகுமரி, நவ.23-*

கன்னியாகுமரி மாவட்டம், திருவள்ளுவர் சிலை முதல் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை நடந்து செல்வதற்கு ரூ.37 கோடி மதிப்பில் கண்ணாடி தரைத்தள பாலம் அமைக்கும் பணி டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என்று பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி இழை கூண்டு பாலப்பணிகளை நேற்று முன்தினம் (21.11.2024) பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்டு தற்போது வெள்ளி விழா காண இருக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கடல்சார் நடைபாதை பாலப்பணிகள் ரூ.37 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பாலத்தின் நீளம் 77 மீட்டர் மற்றும் அகலம் 10 மீட்டர் கொண்ட *Bowstring Arch Bridge* (பவ்ஸ்ட்ரிங் ஆர்ச் பாலம்) ஆகும். இது நவீன தொழில் நுட்பத்தில் கடல் அரிப்பு, கடல் காற்றின் வேகம் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது விவேகானந்தர் பாறையினை கண்டுகளிக்கும் சுற்றுலா பயணிகள் மீண்டும் படகு மூலம் அய்யன் திருவள்ளுவர் சிலையினை காண செல்வதால் அதிக நேரம் விரயமாகின்றது. இந்நடைபாலம் அமைக்கப்படுவதால் சுற்றுலா பயணிகள் எளிதாக அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு செல்லலாம். இப்பாலத்தில் 2.5 மீட்டர் அகலமுடைய கண்ணாடி அடித்தளம் கொண்ட நடைபாதை அமைக்கப்படவுள்ளது. இதனால் கடலின் அழகினை சுற்றுலா பயணிகள் நடந்தவாறே கண்டு ரசித்து மகிழலாம். மேலும் மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மற்றும் மாவட்டத்தின் வருவாய் வளர்ச்சியும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### குமரி மாவட்டத்தில் 1343 கி.மீ. சாலைப் பணிகள் பராமரிப்பு!

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நெடுஞ்சாலைத் துறை கோட்டத்தின் கீழ் மொத்தம் 1343 கி.மீ நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 237 கி.மீ நீளமுள்ள 177 சாலைப்பணிகள் ரூ.226 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 163 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மீதமுள்ள 14 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 6 பாலப்பணிகள் ரூ.11 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 3 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. 3 பாலப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நடப்பு நிதியாண்டில் 19 கி.மீ நீளமுள்ள 7 சாலைப்பணிகள் ரூ.9 கோடி மதிப்பீட்டில் மற்றும் 4 சிறுபாலங்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டிலும் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும் சேலம் - கொச்சின் -கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் 12 கி.மீ. (பழுதடைந்த பகுதிகளில்) நீளத்திற்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகள் நடைபெறவுள்ளன. கன்னியாகுமரி மாவட்ட மீனவ மக்களின் நீண்டநாள் கோரிக்கையான 47 கடற்கரை கிராமங்களை இணைக்கும் புதிய இணைப்பு சாலை 69 கி.மீ. நீளத்தில் கன்னியாகுமரி ஆரோக்கியபுரம் முதல் - நீரோடி வரை புதியதாக சாலை அமைக்கும் பணிக்காக விரிவான திட்ட அறிக்கை ரூ.75 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து முதலமைச்சர் அவர்களால் பாலம் திறக்கப்பட்டு, சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ்குமார் (கிள்ளியூர்), பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் ஆர்.செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.அழகு மீனா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (21.11.2024) கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையிலிருந்து சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை நடந்து செல்வதற்கான கண்ணாடி இழை தரைத்தள பாலம் அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி. பிரின்ஸ், ராஜேஷ்குமார், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு.இரா. செல்வராஜ், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.